பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

49 ] சென்னை—ஞாயிறு, மார்ச்சு 16, 1947. [ விலை. அணா. 2

## காந்தியடிகளின் பீஹார் விஜயம்

காந்தியடிகள் கல்கத்தாவை விட்டு மார்ச்சு மாதம் 4-ந்தேதி இரவு புறப்பட்டு 5-ம் தேதி காலை பீஹாரின் தலைநகரமாகிய பாட்னாவுக்கு வந்து சேர்ந்தார். பிரதம மந்திரி முதலிய தலைவர்கள் வரவேற்றார்கள். அவரை முதல் முதலாக வணங்கியவர் பீஹாருக்கு வரும்படியாக அழைத்து கடிதம் அனுப்பிய பீஹார் மந்திரி டாக்டர் சையத்மகமத் ஆவார். அவர் வணங்கியதும் காந்தியடிகள் விளையாட்டாக 'இன்னும் நீர் உயிருடன் இருந்து கொண்டிருக்கிறீரா?' என்று கேட்டார். அதன்பின் காந்தியடிகள் டாக்டர் சையத் முகமத் வீட்டிற்கு சென்றார். டாக்டர் முகமதின் குடும்பத்தார் கோஷா அனுஷ்டிப்பவர்களாக இருந்த போதிலும் காந்தியடிகளை நேரில் வந்து வரவேற்றார்கள். டாக்டர் ராஜேந்திர பிரசாதின் சகோதரியான சட்ட சபை மெம்பர் ஸ்ரீமதி பகவதிதேவி காந்தியடிகளுடைய நெற்றியில் குங்குமதிலகமிட்டு பூமாலை அணிவித்தார். அப்பொழுது காந்தியடிகள் தாம் பூமாலை அணிவதற்காக பீஹாருக்கு வரவில்லை என்றும் பீஹாரின் கதியைக் கண்டு கண்ணீர் சொரிவதற்காகவே வந்திருப்பதாகவும் சொன்னார்.

காந்தியடிகள் பாட்னாவில் டாக்டர் முகமத் வீட்டிலேயே தங்கியிருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேஜை நாற்காலிகளை அப்புறப்படுத்திவிட்டு மெத்தையும் திண்டும் போடப்பட்டிருக்கின்றன. காந்தியடிகளும் அவருடைய பரிவாரத்தாரும் சீனி உபயோகிக்க மாட்டார்களாதலால் சர்க்கார் பண்ணையிலிருந்து வெல்லம் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

காந்தியடிகள் இப்பொழுது நாலைந்து நாட்களாக பாட்னாவில் தங்கி காங்கிரஸ், முஸ்லிம் லீக், தேசிய முஸ்லீம் கட்சி, சுயேச்சை முஸ்லிம் கட்சி, ஆகிய சகல அரசியல் ஸ்தாபனங்களையும் சேர்ந்த பீஹார் முஸ்லிம் தலைவர்களை சந்தித்து அவர்களுடைய குறைகளையும் கோரிக்கைகளையும் விசாரித்துக்கொண்டு வருகிறார். தினந்தோறும் அவரை பேட்டிகாண வருகிறவர்கள் தொகை அபாரமாயிருக்கிறது. அவர் தம்முடைய நேரம் முழுவதையும் பீஹார் விஷயத்துக்கே செலவு செய்து வருகிறார்.

முன்னால் பீஹார் மாகாண முஸ்லிம் லீக் தலைவராயிருந்த திரு. சையத் அப்துல் அஸிசையும் பீஹார் சட்ட சபையில் முஸ்லிம் லீக் கட்சி தலைவராயிருக்கும் திரு. எஸ். எம். இஸ்மெயிலையும் அவர்களுடைய வீட்டிற்போய் கண்டு வந்தார்.

திரு. சையத் முகமத் இஸ்மெயில் ஹிந்து முஸ்லிம் பிரச்னையை தீர்க்கும் வரை பீஹாரில் தங்க வேண்டுமென்று காந்தியடிகளைக் கேட்டுக்கொண்டார். அத்துடன் முஸ்லிம்களுடைய குறைகளை பரிபூரணமாக தீர்த்து வைக்கும் வரையில் முஸ்லிம் லீக் சட்ட சபையில் மந்திரி சபையுடன் ஒத்துழைக்காது என்றும் காந்தியடிகள் வகுப்புப் பிரச்னையை தீர்க்க முடியாமல் போனால் தாம் சத்தியாக்ரகம் ஆரம்பிக்க எண்ணியிருப்பதாகவும் காந்தியடிகளிடம் கூறினார். அதற்கு காந்தியடிகள் "என்னால் இயன்ற முயற்சிகள் அனைத்தும் செய்வதாக தங்களுக்கு உறுதி கூறுகிறேன். ஆனால் சத்தியாக்ரக விஷயத்தில் தாங்கள் என்னை வென்றுவிட முடியாது" என்று கூறினார்.

மேற்கூறிய இரண்டு தலைவர்களும் அபிவிருத்தி மந்திரி டாக்டர் சையத் மகமதும் பீஹார் மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவரும் கலகம் நடந்தகாலத்தில் தம்முடைய குடும்பத்தாரில் பதினொருபேரை இழந்துவிட்ட முக்கியமான தேசிய முஸ்லிம் தலைவரான திரு. அபுனஸார் அப்துல் பாஸும் காந்தியடிகளிடம் தங்கள் உணர்ச்சிகளை உள்ளத்தில் உள்ளவாறு கூறினார்கள். அவர்கள் ஏகமனதாக கூறியதின் சாரமாவது :—

'ஹிந்து மதத்தைச் சார்ந்த பாமர மக்களுடைய மனப்பான்மை மட்டுமின்றி காங்கிரசைச் சேர்ந்தும், சேராமலும் உள்ள அநேக ஹிந்து தலைவர்களுடைய மனப்பான்மையும்கூட இன்னும் கொஞ்சம்கூட மாறுதலடையாமல் இருந்துகொண்டிருக்கிறது. பகைமை உணர்ச்சியும் அலட்சிய உணர்ச்சியும் போய் பச்சாதாப உணர்ச்சியும், அனுதாப உணர்ச்சியும் பிறக்கவில்லை. வீட்டை விட்டு ஓடிப்போன முஸ்லிம் அகதிகள் திரும்ப வருவதற்கும் அவர்களுடைய வாழ்வை புனருத்தாரணம் செய்வதற்கும் பெரிய தடையாக உள்ளது இந்த ஒரே ஒரு விஷயம்தான்.'

பீஹாரில் பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முஸ்லிம்கள் எல்லோரும் காந்தியடிகள் பாட்னாவுக்கு விஜயம் செய்திருப்பதை மிகுந்த உத்ஸாகத்துடன் வரவேற்கிறார்கள். மாகாண முஸ்லிம் லீக் தலைவர் கூறுவதாவது :—

"காந்தியடிகள் சமூகங்களுக்கிடையில் ஒற்றுமை உண்டாக்குவதற்காக ஆசைப்படுவதையும் அவருடைய அந்தரங்க சுத்தியையும் முஸ்லிம்களாகிய நாங்கள் பரிபூரணமாக நம்புகிறோம். அவருடைய விஜயத்தால் நன்மை உண்டாகுமென்று நாங்கள் பெரிதும் தைரியமடைகின்றோம். பண்டித ஜவஹர்லால் நேரு கலக சமயத்தில் கலகம் நடந்துகொண்டிருந்த இடங்களுக்கு விரைந்து சென்று கலகத்தை அடக்கியதற்காக அவரை மனமார வாழ்த்துகின்றேன். பீஹாரில் கலகம் அடங்காவிட்டால் தாம் மரணபரியந்தம் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக காந்தியடிகள் கூறியது மிகுந்த பலன் அளித்தது. கலகத்தை பரவவொட்டாமல் தடை செய்தது."

பீஹார் பிரதம மந்திரி திரு. ஸ்ரீ கிருஷ்ண ஸின்ஹா கலக சமயத்தில் முஸ்லிம்களிடம் அநுதாபத்துடன் நடந்துகொண்டார் என்று சகல கட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம்கள் ஏகமனதாக கூறுகிறார்கள். அநேக முஸ்லிம்களை கலக காலத்தில் காங்கிரஸ்

தலைவர்கள் காப்பாற்றினார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் சாப்ராவைச் சேர்ந்த பண்டிட் கிரீஷ்திவாரியும், கயாவைச் சேர்ந்த சத்ரோகன சிங்கும், பாட்னாவைச் சேர்ந்த சிறுகேஷவர் பிரசாதும் ஆவார்கள். அபிவிருத்தி மந்திரி டாக்டர் சையத் முகமத் தேகசுகமில்லாதிருந்த போதிலும் அநேக முஸ்லிம்களை காப்பாற்றி யிருக்கிறார்.

## காங்கிரசே பொறுப்பாளி

மகாத்மா காந்தியடிகள் பாட்னாவில் பங்கிப்பூர் மைதானத்தில் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மார்ச்சு மாதம் 5-ந்தேதி மாலை நடந்த முதல் கூட்டத்துக்கு ஆண்களும் பெண்களுமாக ஒரு லட்சம் ஜனங்கள் வந்து அந்த மைதானத்தில் உட்கார்ந்து பிரார்த்தனை பாடல்களை அமைதியாக கொஞ்சமும் சப்தமில்லாமல் கேட்டுக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீமதி மனுகாந்தியும் திரு. தேவ்பிரகாஷும் பஜனைப் பாடல்களையும் கீதா ஸ்லோகங்களையும் குரான் மணிவாசகங்களையும் பாடவும் படிக்கவும் செய்தார்கள். அந்தக் கூட்டத்திற்குப் பீஹார் மந்திரிகளும் டாக்டர் ராஜேந்திர பிரசாதும் மாகாணத்தின் பல பாகங்களையும் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்களும் வந்திருந்தார்கள். பஜனை முடிந்தபின் காந்தியடிகள் கூறியதாவது:—

"பீஹாரிலுள்ள ஹிந்துக்கள் தங்கள் சகோதரர்களாகிய முஸ்லிம்களுக்கு செய்திருக்கும் கொடுமைகள் நவகாளியில் முஸ்லிம்கள் ஹிந்துக்களுக்கு செய்துள்ள கொடுமைகளைவிட ஆயிரமடங்கு மோசமானவைகளாகும் என்பதை நான் அறிவேன். பீஹார் ஹிந்துக்கள் தாங்கள் செய்த குற்றத்தின் அளவுக்குத் தக்கதாக தங்களால் இயன்ற பரிகாரங்களெல்லாம் செய்துகொண்டு வருகிறார்கள் என்று நம்பிக்கொண்டிருந்தேன். நீங்கள் உண்மையாகவே பச்சாதாபப்படுவதாக இருந்தால் "பாபி எவ்வளவு பெரியவனோ அவ்வளவு அவனுடைய பாபமும் பெரிது" என்னும் வாக்கியத்தின் உண்மையை நிரூபித்துக் காட்டவேண்டும். பீஹாரில் வெறி பிடித்து தாங்கள் மனிதர்கள் என்பதையே மறந்து கொடுமைகள் செய்த ஹிந்துக்கள் போக்கிரிக் கூட்டத்தை சேர்ந்தவர்கள் என்றும் அதனால் பீஹாரிலுள்ள காங்கிரஸ்காரர்களை அதற்கு பொறுப்பாளிகளாக ஆக்கமுடியாது என்றும் பீஹாரிலுள்ள இந்துக்கள் கூறுவார்களானால் தங்களைத் தாங்களே தர்மவான்கள் என்று கூறிக்கொள்ளும் குற்றத்தை செய்பவர்களாவார்கள். அந்தக் குற்றத்தை அவர்கள் செய்யமாட்டார்கள் என்று நம்புகிறேன்.

அந்தக் குற்றத்தை செய்வதாயிருந்தால் காங்கிரஸ் மகாசபை ஒரு உபயோகமற்ற கட்சியாக ஆகிவிடும். ஆனால் காங்கிரசோ இந்தியாவிலுள்ள சகல ஸ்தாபனங்களிலும் தான்மட்டும்தான் இந்திய மக்கள் அனைவர்க்கும் தன்னுடைய சேவையின் மூலம் பிரதிநிதித்துவம் வகிக்க உரிமையுடையது என்று கூறுகின்றது. ஆதலால் எந்த வகுப்பார் குற்றம் செய்தாலும் அதற்கு காங்கிரஸ் மகாசபை பொறுப்பாளியாக எண்ணிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். நவகாளியில் ஏற்பட்ட அக்கிரமங்களை பரவவொட்டாமல் பீஹார் அக்ரமங்களே தடுத்துவிட்டதாக இந்தியாவில் சகல பாகங்களிலும் உள்ள ஹிந்துக்களில் முன்பின் யோசியாதவர்கள் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அதைக் காண எனக்கு வருத்தமாயிருக்கிறது. அந்தமாதிரி எண்ணினாலும் செய்தாலும் நமக்கு ஒருநாளும் சுதந்திரமும் வீரமும் கிடைக்கமாட்டா. அவற்றிற்குப் பதிலாக அடிமைத்தனமே சித்திக்கும் என்பதை நான் எவ்வளவு பலமாக வற்புறுத்திக் கூற முடியுமோ அவ்வளவு பலமாக வற்புறுத்திக் கூறுகின்றேன். இங்கே நடைபெற்ற காட்டுமிராண்டித்தனமானது நாகரிகத்தையோ மதத்தையோ சுதந்திரத்தையோ காப்பாற்றக்கூடு மென்று எண்ணுவது வெறும் கோழைத்தனமேயாகும். நீங்கள் எல்லா விதத்திலும் இந்தியா சுதந்திரமடைய வேண்டுமென்று விரும்பினால் பிறர் காட்டுமிராண்டித்தனமான செய்கைகளில் இறங்குவதைப் பார்த்து நீங்களும் இறங்கிவிடக் கூடாதென்றும் அந்தமாதிரிக் காரியங்கள் செய்பவர்கள் இந்தியாவுக்கு சுதந்திரம் வரவொட்டாமல் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் நான் உங்களுக்கும் இந்தியாவிலுள்ள சகல மக்களுக்கும் எச்சரிக்கை கூறுகின்றேன்.

இன்று கூட்டத்திற்கு பீஹார் மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஆசிரியர் அப்துல்பாரியின் மோட்டார்காரில் வந்தேன். நான் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு நடந்து வராமல் காரில் வந்ததற்காக உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். ஆனால் ஏன் நான் காரில் வர நேர்ந்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். அது உங்களுக்கு அகௌரவத்தையே உண்டுபண்ணுவதாயிருக்கிறது. யாரை வரவேற்பதானாலும் விழுந்தடித்துக்கொண்டு போய் வரவேற்பது முறையன்று. அமைதியாக இருந்து வரவேற்கும் முறையை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். நான் வயதானவன் கூச்சல் போட்டால் என்னால் சகிக்கமுடியவில்லை. இனிமேல் இவ்விதம் நடந்துகொள்ள மாட்டீர்கள் என்று நம்புகிறேன். நீங்கள் நான் வரும்பொழுது தவறாக நடந்து கொண்டபோதிலும் அதன்பின் பிரார்த்தனை நடந்த பொழுதும் நான் பேசியபொழுதும் நீங்கள் வெகு அமைதியாக இருந்ததற்காக உங்களெல்லோரையும் பாராட்டுகிறேன்."

பிரார்த்தனைக் கூட்டம் முடிந்தபிறகு காந்தியடிகள் தாம் தங்கியிருக்கும் டாக்டர் சையத் மகமத் வீட்டிற்கு நடந்துசென்றார். அப்படி அவர் நடந்து செல்லும்போது அதுவரை அமைதியாயிருந்த ஜனங்களில் ஒரு பகுதியார் திடீரென்று அவரை தரிசிப்பதற்காக எழுந்து வந்தார்கள். அவர்மேல் விழுந்துவிட்டார்கள். போலீஸாரால்கூட அவர்களை அடக்கமுடியவில்லை. காந்தியடிகளுடைய செருப்புகளில் ஒன்றும் கையில் பிடித்து நடக்கும் தடியும் தவறிவிட்டன. சிறிது நேரம் கழித்து அவைகளை எடுத்துக்கொண்டு வந்து காந்தியடிகளிடம் கொடுத்தார்கள்.

## ஹோலிப் பண்டிகை

காந்தியடிகள் மார்ச் மாதம் 6-ம் தேதி மாலை பிரார்த்தனை கூட்டம் நடந்த இடத்துக்கு நடந்து வந்தார். இரண்டு பக்கங்களிலும் தொண்டர்கள் அணிவகுத்து நின்றுகொண்டிருந்தார்கள். ஜனங்கள் அமைதியாக உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்.

ராம்துன் பாடப்பட்டபொழுது சிலர் பிசகாகத் தாளம் போட்டார்கள். அப்பொழுது அவர்கள் சரியாக தாளம் போடும்படியாக கற்றுக்கொள்ள வேண்டுமென்று யோசனை கூறினார். ஜனங்கள் அமைதியாக இருந்ததற்காக அவர்களையும் மாகாணக் கமிட்டி தலைவர் அப்துல் பாரியையும் அவருடைய தோழர்களையும் பாராட்டினார்.

அதன்பின் மறுநாள் ஹோலிப் பண்டிகை வருவதால் அதை எவ்விதமாக கொண்டாட வேண்டுமென்று கேட்டு எழுதிய ஒரு சீட்டு அவர் கையில் கொடுக்கப்பட்டது. அதை வைத்துக்கொண்டு காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு பேச ஆரம்பித்தார் :—

''ஹோலிப் பண்டிகை ஒரு மத சம்பந்தமான பண்டிகை. அதனுல் அன்று களியாட்டங்கள் நடக்கக் கூடாது. கடவுளோடு ஒன்று படும் தியானம் செய்யவே முயல வேண்டும். நவகாளியிலுள்ள ஹிந்துக்கள் எப்படி முஸ்லிம் பண்டிகைகளைக் கண்டு அஞ்சுகின்ருர்களோ அது போலவே பீஹாரிலுள்ள முஸ்லிம்கள் ஹிந்துப் பண்டிகைகளைக் கண்டு அஞ்சுகின்ருர்கள். பீஹாரிலுள்ள ஹிந்துக்கள் இதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு ஹோலிப் பண்டிகையை மிகுந்த அடக்கத்துடன் கொண்டாட வேண்டும். முஸ்லிம்களுக்கு பயமோ கலக்கமோ உண்டாகக் கூடிய எந்த விதமான ஆர்ப்பாட்டங்களிலும் கொஞ்சங் கூட ஈடுபடலாகாது. ஹோலிப் பண்டிகை யன்று நீங்கள் உங்கள் நண்பர்களையும் பந்துக்களையும் அவர்களுடைய வீட்டில் சந்தித்து சந்தோஷம் விசாரிப்பது போதாது. முஸ்லிம்களுடைய வீடுகளுக்கும் சென்று அவர்களையும் உஙகளுடன் சந்தோஷமடையும் படியாக செய்ய வேண்டும்.

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சமாதான மாகவே இதுவரை வாழ்ந்து கொண்டு வந்தார்கள். இப்பொழுது ஒருவரை ஒருவர் நண்பராக பாவிக்க முடியா விட்டாலும் ஒருவரை ஒருவர் பகைவராக பாவிக்காமல் இருக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். ஹோலிப்பண்டிகை யன்று மறுபடியும் தங்களைத் தாக்க ஆரம்பித்து விடுவார்களோ என்று முஸ்லிம்கள் பயப்படுகிருர்கள். நவகாளி ஜில்லாவிலும் திப்பரா ஜில்லாவிலும் உள்ள ஹிந்துக்கள் என்னிடம் கூறியதையே இவர்களும் கூறுவதைக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நவகாளியில் எவ்விதமான அக்கிரமச் செயல்களைக் கேட்டேனே அதே விதயான அக்கிரமச் செயல்களைப்பற்றி பாட்னுவிலும் கேட்க வேண்டியிருப்பது எனக்கு வெட்ககரமாயிருக்கிறது. ஆதலால் மனிதனிடத்திலுள்ள பயத்தை எல்லாம் ஒழித்து விட்டு கடவுளையே பரிபூரணமாக நம்பி இருக்க வேண்டு மென்று நவகாளியிலுள்ள ஹிந்துக்களுக்கு கூறியது போலவே பீஹாரிலுள்ள முஸ்லிம் சகோதராகளுக்கும் கூறத் துணிகின்றேன். ஆனல் இந்த விதமாக நடப்பது சிரமசாத்தியமான காரியம் என்பதை நான் அறிவேன்.

வந்தே மாதரம், ஜேய் ஹிந்த், ஜெயபாரத் என்ற கோஷங்கள் முஸ்லிம்களை இன்று பயப்படும்படி செய்கின்றன. இந்த மாதிரி நிலைமை ஏற்பட்டிருப்பது வெட்ககரமானதாகும். நான் அநேக முஸ்லிம் லீக் தலைவர்களை கண்டு பேசினேன். அவர்கள் தங்கள் உள்ளத்தில் உள்ளதை என்னிடம் ஒளியாமல் சொல்லியிருக்கிருர்கள். பீஹார் போன்ற மாகாணத்தில் முஸ்லிமகள் இருக்கவே கூடாதோ என்று அவர்கள் கேட்கிருர்கள். டாக்டர் சையத் மகமுது போன்ற காங்கிரஸ் முஸ்லிம் நண்பர்களும தற்கால நிலைமையைக் குறித்து வருந்தவே செய்கிருர்கள். இப்படி சகோதரர்கள் ஒருவரை ஒருவர் பயமுறுத்துவது உண்மையாக இருக்குமானுல் அதை என்னுல் பொறுக்க முடியாது. ஒருவர் வெறி கொண்டு தவறு செய்தால் அதுபோலவே மற்றவர்களும் வெறி கொண்டு தவறு செய்ய வேண்டுமோ? அந்த விதமாக நீங்கள் நினைத்து கொள்வீர்களானுல் இந்தியா தேசம் ரத்த வெள்ளத்தில் மூழ்கிவிடவே நேரும்.

இந்த விதமாக நடைபெறக்கூடாதென்று நாம் மனத்தில் உறுதி செய்து கொண்டால் இந்த கதி நமக்கு ஒரு நாளும் நேர மாட்டாது. இது விஷயத்தில் பெண்களையே நம்பியிருக்கிறேன். அவர்கள் தான் அஹிம்சைக்கும் அஹிம்சையின் அஸ்திவாரமான பிராணத் தியாகத்துக்கும் உயிரோடுள்ள உருவங்கள் ஆவார்கள் என்று நான் எப்பொழுதும் கூறி வருவதை நீங்கள் அறிவீர்கள். இந்துக்கள் தங்களுக்குச் செய்த அக்கிரமங்களுக்காக பச்சாதாப படுவது மட்டுமன்றி முன்னிலும் அதிகமாக தங்களிடம் அன்பு செலுத்துகிருர்களென்று ஒவ்வொரு முஸ்லிமும் எண்ணும்படியாக நீங்கள் ஹோலிப்பண்டிகையை கொண்டாட வேண்டும் இந்த மாதிரி பழைய நட்பு முறையை மறுபடியும் உயிர்ப்பித்து விடுவீர்களானுல் ஹோலிப் பண்டிகை உண்மையிலேயே கடவுளுக்கு பிரீதியான ஒரு புண்ணிய விழாவாக இருக்கும்.

நீங்கள் என் சொல் கேட்டு நியாயம் வழங்குவீர்கள் என்று நான் நம்புவதால் இன்னு மொரு விஷயத்தையும் உங்களிடம் கூற விரும்புகிறேன். ஹிந்துக்களுடைய வீடுகளில் முஸ்லிம் பெண்களை இன்னும் பலாத்காரமாக வைத்துக் கொண்டிருக்கிருர்கள் என்று கேள்விப்படுகிறேன். அது உண்மையா யிருக்குமானுல் அந்த முஸ்லிம் பெண்கள் இன்னும் உயிரோடு இருந்து கொண்டிருந்தால் அவர்கள் ஒவ்வொருவரையும் அவர்கள் வீட்டிற்கு அனுப்பி விடுவீர்களென்று எதிர் பார்க்கிறேன்.

அக்கிரமங்கள் செய்தவர்கள் உண்மையாகவே பச்சாதாபப் படவேண்டும். அவர்களை பச்சாதாபப் படும்படியாகவும் தைரியமாக தண்டனையை ஏற்றுக் கொள்ள முன் வரும்படியாகவும் அவர்களுடைய மனதில் பதியும்படியாக சொல்ல வேண்டியது ஒவ்வொருவருடைய கடமையாகும். அது முடியா விட்டால் முஸ்லிம் பெண்களை என்னிடமாவது ராஜேந்திரபாபு விடமாவது பத்திரமாக கொண்டு வந்து சேர்த்து விடவேண்டும்.

ஹிந்துக்கள் வாயால் மட்டும் பச்சாதாபப்பட்டாலும் பணத்தைக் கொடுத்து பரிகாரம் செய்து விடலாம் என்று எண்ணினுலும் போதாது. உங்களுடைய ஹிருதயங்கள் தூயதாக ஆகவேண்டும். அது தான் இப்பொழுது தேவையான தாகும். உங்களுடைய மனதில் நிறைந்துள்ள பகைமையும் அலட்சியமும் போய்விட வேண்டும். அவைகளுக்கு பதிலாக முஸ்லிம்கள் ஆண் பெண் குழந்தைகள் அனைவரும் எவ்வித தடையுமின்றி தங்கள் மதத்தை அனுஷ்டிக்க முடியுமென்று தைரியம் கொள்ளுமாறு உங்கள் மனத்தில் அன்பு அரசாட்சி செய்ய வேண்டும். இரண்டு சகோதர சமூகங்களுக்கிடையிலே இத்தகைய உறவை உண்டாக்குவதற்கு ஹோலிப் பண்டிகையை ஒரு நல்ல சந்தர்ப்பமாக செய்து கொள்ள வேண்டு மென்று நான் உங்களைக் கேட்டு கொள்கிறேன்.''

காந்தியடிகள் ஹோலிப் பண்டிகையை முஸ்லிம்களுடன் பழையபடி உறவு கொண்டாடுவதற்காக உபயோகித்துக் கொள்ள வேண்டு மென்று கூறிய உபதேசம் அதிகப் பலன் தந்திருக்கிறது. பாட்னுவில் அநேக இடங்களில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒன்றுச்சேர்ந்து அந்த விழாவை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடினுர்கள். ஒருவர்மேல் ஒருவர் வர்ணஜலத்தை வீசி எறிந்து மகிழ்ந்தார்கள். இப்படி வெகு சீக்கிரத்தில் இரு வகுப்பார்க்கு மிடையே ஒற்றுமை ஏற்படுவதைக்கண்டு காங்கிரஸ்காரர் எல்லோரும் சந்தோஷப்படுகிருர்கள்.

# தமிழ் ஹரிஜன்

மார்ச்சு 16, ஞாயிறு 1947

## ஒரிஸ்ஸாவின் துணிக் கொள்கை

ஜனங்களுடைய நிலைமையை அபிவிருத்தி செய்வதற்காக பொதுஜன சர்க்கார் எந்தவிதமான திட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதுபற்றி மனக்குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. ஒரிஸாவின் தற்கொலை என்று ஒரு குறிப்பு எழுதியிருந்தோம். இப்பொழுது ஒரிஸாவின் பிரதம மந்திரி மேத்தாப் ஒரு மறுப்பு எழுதியிருக்கிறார். அதை மகிழ்வுடன் கீழே தருகிறோம்:—

“குறிப்பின் முதல் பாராவில் கண்ட விஷயத்தைக் குறித்து யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். அதில் கூறியிருக்கும் சகல விஷயங்களையும் நான் பரிபூரணமாக ஒப்புக் கொள்கிறேன். ஆனால் நீங்கள் ‘மாகாணங்களுக்கு கொடுக்கப்படும் மில் கதிர்களை வாங்க முந்திக்கொண்ட மாகாணங்களில் ஒரிஸ்ஸா முதலாவதாகும். ஒரிஸ்ஸா துணிமில் என்னும் புதுக் கம்பெனிக்காக மெஷின்கள் தருவிக்க முந்திக் கூட்டியே அனுமதியை பெற்று விட்டது’ என்று இரண்டாவது பாராவில் கூறியிருப்பதைக்காண ஆச்சரியமாக இருக்கிறது நீங்கள் ஒரிஸ்ஸாவிலுள்ள உங்கள் சிநேகதரிடமிருந்து இல்லாவிட்டாலும் சர்க்காரிடமிருந்தாவது சரியான தகவல்களை சேகரித்துக் கொள்ள முயற்சி எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். தங்களுக்கு தெரிவதற்காக கீழ்க்கண்ட விஷயங்களை எழுதுகிறேன்.

ஒரிஸாவில் துணி மில் ஏற்படுத்துவது சம்பந்தமாக திரை மறைவில் நடந்த பிரசாரத்தை ஆதாரமாகக் கொண்டே நீங்கள் அந்தக் குறிப்பை எழுதியிருக்கிறீர்கள். நான் கூறப்போகும் தகவல்களிலிருந்து தாங்கள் தெரிந்து கொண்டது தவறு என்று அறிந்து கொள்வீர்கள். இந்திய சர்க்கார் 1945-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில் திரு டி. எம். கட்டா என்பவர் தலைமையில் யுத்தத்துக்கு பின் துணி அபிவிருத்தி திட்ட கமிட்டி என்ற ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்தக் கமிட்டியார் தங்களுடைய அறிக்கையை 1945-ம் நவம்பரில் சமர்ப்பித்தார்கள். அந்த அறிக்கையில் அவர்கள் இந்தியாவை பலபகுதிகளாக பிரித்து பம்பாயை அதிக உற்பத்தி பகுதியாகவும் மற்றவைகளை குறைந்த உற்பத்தி பகுதிகளாகவும் கூறியிருக்கிறார்கள். குறைந்த உற்பத்தி பகுதிகளில் ஒரிஸ்ஸாவும் ஒன்று. அதனால் அதற்கு லட்சத்தி ஐம்பதினாயிரம் கதிர்கள் வைத்துக்கொள்ள அனுமதி கொடுக்கும்படி சிபார்சு செய்தார்கள். ஆனால் துணிக் கமிஷனர் அதை லட்சத்திப் பத்தொன்பதாயிரத்துக்கு குறைத்து விட்டார். அதன் பின் மாகாணசர்க்கார் எந்த எந்த கம்பெனிக்கு எத்தனை எத்தனை கதிர்கள் கொடுக்க வேண்டுமென்பதைக் குறித்து 1946 ஏப்ரல் 15 தேதிக்குள் தகவல் அனுப்ப வேண்டுமென்று இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டார்கள். இதே மாதிரி மற்ற மாகாணங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டன என்பது இங்கே குறிப்பிட வேண்டியதாகும். ஒரிஸ்ஸா மாகணத்தில் காங்கிரஸ் மந்திரி சபை 1946 ஏப்ரல் 27 ம் தேதி ஏற்பட்டது. இப்படி புதிய மந்திரி சபை ஏற்பட்டிருப்பதால் மாகாணத்திற்கு கொடுப்பதாகச் சொல்லும் கதிர்களை வேண்டாமென்று மாகாண சர்க்கார் இந்திய சர்க்காருக்கு அறிவித்திருக்கக் கூடும். அப்படிச் செய்திருந்தால் எந்த கம்பெனிகளுக்கு கதிர்கள் கொடுப்பதாக கூறப்பட்டதோ அந்தக் கம்பெனிகள் மில்களை பக்கத்தில் உள்ள சமஸ்தானங்களில் ஏற்படுத்தியிருக்கக் கூடும் அல்லது இந்திய சர்க்காரின் உத்திரவுப்படி ஒரிஸ்ஸாவுக்கு கொடுப்பதாகச் சொன்ன கதிர்கள் வங்காளத்துக்கு கிடைத்திருக்கும். அல்லது சென்னை மாகாணத்தில் நடந்தது போல மாகாண சர்க்கார் வேண்டாமென்று கூறிய போதிலும் இந்திய சர்க்கார் அவைகளை மாகாணத்தின் மீது சுமத்தியிருப்பார்கள். அது எப்படியாயினும் 1945 ல் கொடுப்பதாய்ச் சொன்ன கதிர்களை வேண்டாமென்று மாகாண சர்க்கார் இந்திய சர்க்காருக்கு அறிவிக்கவில்லை. இதற்கிடையில் கட்சிக்கூட்டத்தில் இதைப்பற்றி இடைவிடாமல் விவாதம் நடந்துகொண்டிருந்தது. அதனுடன் துணி விஷயத்தில் மாகாண சர்க்கார்கள் எந்தவிதமான கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமென்பதைப் பற்றி மற்ற மாகாணங்களுடன் விவாதம் நடந்து கொண்டிருந்தது. ஒரிஸ்ஸா காங்கிரஸ் சட்ட சபைக் கட்சியார் செய்துள்ள தீர்மானத்தை இத்துடன் அனுப்பியிருக்கிறேன். சென்னையைத் தவிர வேறு எந்த மாகாணமும் இது விஷயத்தில் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொளளவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். பம்பாய் மாகாணம் மில் கதிர்களை வேண்டாமென்று சொல்லியிருக்குமானல் அது அதிக துணி உற்பத்தி மாகாணம் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

கைத்தொழில் விஷயத்தில் பின்னல்நிற்கும் மாகாணங்களுக்கு மிஷின்கள் இறக்குமதி செய்யும் விஷயத்தில் விசேஷ சலுகை காட்ட விரும்புவதாக இந்திய சர்க்கார் 1946 நவம்பர் 4-ம் தேதி கூறினார்கள். முந்திக் கூட்டி கதிர்களை பெறக்கூடிய யோக்கியதையுடைய கம்பெனிகள் எவை என்று கூடிய சீக்கிரத்தில் அறிவிக்க வேண்டுமென்று அந்தக் கடிதத்தில் இந்திய சர்க்கார் மாகாண சர்க்கார்களை வேண்டிக் கொண்டார்கள். இந்திய சர்க்காரின் இந்தக் கொள்கையின் காரணமாகத்தான் ஒரிஸ்ஸா மாகாணம் கைத்தொழில் விஷயத்தில் பின்னல் நிற்பதால் எங்கள் துணி மில் மட்டுமன்றி மற்ற கைத்தொழில்களும் விசேஷ உதவி பெற்று வருகின்றன.

ஒரிஸ்ஸா மாகாணம் புது மில்கள் ஏற்படுவதை தடுக்கும் விஷயத்தில் மற்ற மாகாணங்களுக்கு வழி காட்ட முடியவில்லை என்பதையும் அப்படியானல் மில்களை ஏற்படுத்த வழிகாட்டுகிறதா அதுவுமில்லை என்பதையும் நான் இதுவரை கூறியதிலிருந்து நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள். நான் இது விஷயமாக ஜாஜுஜியுடன் கடிதப் போக்குவரத்து நடத்தினேன் துணி உற்பத்தி கொள்கையை மாகாணங்கள் மட்டும் முடிவு செய்தல் முடியாது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். அகில இந்தியாவுக்கும் பொதுவான ஒரு கொள்கையை வகுத்தாலொழிய வெளி மாகாணங்களிலிருந்து துணி முழுவதும் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமுள்ள ஒரிஸ்ஸா மாகாணத்தைப் போன்ற எந்த ஒரு மாகாணமும் தனியாக புரட்சிகரமான மாறுதல்களை செய்துவிட முடியாது. மற்ற மாகாணங்களும் சமஸ்தானங்களும் எவ்விதமாக நடந்துகொண்ட போதிலும் துணி உற்பத்தி விஷயத்தில் ஒரிஸ்ஸா மாகாணம் தனக்கென்று தனியாக ஒரு கொள்கையை வகுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறும் வாதம் சரியானதென்று நான் கூற முடியாது.

உங்கள் குறிப்பின் முதல் பாராவில் கூறியிருக்கும் அடிப்படைத் தத்துவத்தை ஒப்புக்கொள்ளும் எங்களுக்கு உண்மையிலேயே உதவி செய்ய விரும்பினல் மந்திரிகளென்ற நிலைமையில் நாங்கள் தீர்க்க வேண்டியிருக்கும் பிரச்னைகளை எப்படி தீர்ப்பது என்பதை விபரமாக கூறவேண்டும். அப்படிக்கின்றி

நிலைமையை அறிந்துகொள்ளாமல் கண்டனம் செய்வதால் எவ்விதமான நன்மையும் ஏற்படமாட்டாது.''

பிரதம மந்திரி குறிப்பிட்ட ஒரிஸ்ஸா சட்ட சபை காங்கிரஸ் கட்சியின் தீர்மானம் வருமாறு :—

"இப்பொழுது ஒரே இடத்தில் அதிகமான சாமான்களை செய்து குவிக்கிறார்கள், வியாபாரம் போட்டியின் பேரில் நடந்து வருகிறது. இவற்றிற்கு பதிலாக ஒவ்வொரு கிராமமும் தனக்கு வேண்டிய பொருள்களை தானே உண்டாக்கிக் கொள்வதற்காக கதர் முதலிய கைத்தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்பதை இந்தக் கட்சியார் ஏற்றுகொள்கிறார்கள். காந்தியடிகள் காட்டிய வழியில் சமூகத்தையும் பொருளாதாரத்தையும் அடியோடு மாற்றி அமைத்தாலொழிய உலகத்தில் சமாதானத்தை நிலவும்படி செய்வதென்பது எப்பொழுதும் வெறும் கனவாகவே இருந்து விடும் என்பதை இந்தக் கட்சியார் பரிபூரணமாக உணர்கிறார்கள், ஆனால் அதே சமயத்தில் இந்த லட்சியத்தை அடைவதற்கு அளவற்ற பொறுமையும் விடா முயற்சியும் தேவை என்பதையும் சில மாதங்களிலோ சில வருஷங்களிலோ செய்து முடித்து விடக் கூடிய காரியமில்லை என்பதையும் உணர்கிறார்கள். சர்க்காரும் தேசீய ஸ்தாபனமும் இந்தப் பிரமாண்டமான வேலையில் ஜனங்களிடம் உத்ஸாகம் உண்டாக்க ஒன்று சேர்ந்து உழைத்தால்கூட இந்தப் புதிய சமூகத்தை பூரணமாக சிருஷ்டிக்க இருபது வருஷகாலம் பிடிக்கும் என்று இந்தக் கட்சியார் அபிப்பிராய படுகிறார்கள்.

சர்க்கார் மட்டுமே இந்த மாறுதலை உண்டாக்க முயலுவது பயன் தராது என்பது நிச்சயம். இந்த விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இந்த மாகாணத்தில் துணிமில்கள் ஒன்றுகூட இல்லாமல் செய்யும் விஷயத்தை இந்தக் கமிட்டியார் ஆராய்ந்தார்கள். இத்துடன் மாகாணத்துக்கு கொடுப்பதாக சொல்லும் மில் கதிர்களை வைத்து துணிமில்கள் ஏற்படுத்தும் விஷயத்தையும் ஆராய்ந்தார்கள். கட்சி கூட்டத்தில் சாதகபாதகங்கள் முழுவதும் விவாதிக்கப் பட்டன. கையால் நூற்று கையால் நெய்து உண்டாக்கும் துணியைக் கொண்டு மாகாணத்தின் தேவை முழுவதையும் பூர்த்தி செய்யக்கூடிய காலம் வரும்வரை பம்பாயிலும் ஆமதாபாத்திலும் பெரிய பணக்காரர்கள் நடத்திவரும் மில்களை எதிர்பார்த்து நிற்பதைவிட மாகாண சர்க்காரால் ஆரம்பிக்கப் பட்டு நடத்தப்படும் துணி மில்களை நம்பியிருப்பதே விரும்பத்தக்க காரியமென்று கட்சியார் எண்ணுகிறார்கள். ஆயினும் மற்ற மாகாணங்களோ அல்லது காங்கிரஸ் மாகாணங்களோ புதிதாக மில்கள் ஆரம்பிப்பதை தடுக்க ஒப்புக்கொண்டாலும் அல்லது இப்பொழுதுள்ள மில்களையும் இனிமேல் ஆரம்பிக்கும் மில்களையும் தேசீயமாக்கி சர்க்காரே நடத்துவதாயிருந்தாலும் புது மில்களை ஆரம்பிப்பதை தடுக்கும் திட்டத்தை ஆதரிக்கத் தயாரென்று இந்தக் கட்சி தெளிவுபடுத்துகிறது.''

என் பதில் :—மேற் கண்டவைகளுக்கு கீழ்க்கண்ட பதில் அனுப்பப்பட் டிருக்கிறது :—

"தாங்கள் மாகாணத்தின் துணிக் கொள்கையைப் பற்றி 1947 பிப்ரவரி 22-ம் தேதி எழுதிய கடிதத்தில் விளக்கி கூறி யிருப்பது குறித்து தங்களுக்கு வந்தனம் செலுத்துகிறேன். நான் தங்களையும் காங்கிரஸ் சர்க்காரையும் குறை கூறுவதாக எண்ணிக் கொண்டு தங்கள் மீது குற்றமில்லை என்று காட்டுவதற்காக தாங்கள் பதவியேற்ற தேதியை குறிப்பிட்டிருக்கிறீர்கள். அத்துடன் நான் சிலருடைய பிரசார நோட்டீஸுகளைக் கண்டு தவறான முடிவுக்கு வந்திருப்பதாகவும் நீங்கள் கூறி யிருக்கிறீர்கள். யார்மீதும் குறை கூறுவது என்னுடைய நோக்கமன்று. நான் காங்கிரசின் பெயரைக் கூட குறிப்பிட வில்லை. எப்பொழுது காரியம் மேற்கொள்ளப் பட்டதோ அப்பொழுதிருந்த சர்க்காரைத் தான் ஒரிஸ்ஸா சர்க்கார் என்று குறிப்பிட்டேன்.

பிரசாரம் செய்யும் யாருடனும் நான் தொடர்பு வைத்துக் கொள்ள வில்லை. "இந்தியன் பைனான்ஸ்" "ஈஸ்டர்ன் எக்கானமிஸ்ட்" என்ற பொறுப்பு வாய்ந்த ஆங்கில சஞ்சிகைகளில் வெளியாயிருந்த துணி மில் திட்டத்தை பார்த்தே நான் எழுதினேன். தாங்கள் விளக்கம் கூறி யிருப்பதில் தாங்களே பொறுப்பாளி என்று ஏற்றுக் கொள்கிறீர்கள். சர்க்கார் மாறி யிருப்பதால் மில் கதர்கள் வேண்டாமென்று மாகாண சர்க்கார் இந்திய சர்க்காருக்குத் கூறியிருக்கலாமென்று தாங்கள் கூறுகிறீர்கள். ஆனால் அந்தமாதிரி செய்யவில்லை. நீங்கள் அப்படிச் செய்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும் என்பதைப் பற்றிக் கூறுகிறீர்கள். ஆனால் பிறர் தவறு செய்யக் கூடுமென்று தாம் முன் கூட்டி தவறு செய்வது அதற்கேற்ற சமாதானமாகாது.

ஒரிஸ்ஸா சட்ட சபை காங்கிரஸ் கட்சியார் வகுத்துள்ள கொள்கை கதரை வாயளவிலேயே ஆதரிக்கின்றது. அந்தக் கட்சிக்கு கதரிடத்தில் உண்மையான நம்பிக்கை இல்லை என்று தெளிவாக தெரிகிறது. ஒரிஸ்ஸா மாகாணத்தில் பணக்காரர்கள் அதிகமாயில்லை. அதனால், கதர் விஷயத்தில் தன்னுடையதேவைக்கு தானே உற்பத்திசெய்துகொள்ள வேண்டும் என்னும் கொள்கையை அனுஷ்டிப்பதற்கு அகில இந்திய துணிக்கொள்கையை வகுக்க வேண்டிய அவசியமில்லை. துணி விஷயத்தில் சுய தேவையை பூர்த்திசெய்வதற்கு பெரிய மாகாணம் கூட வேண்டியதில்லை. குடும்பமும் கிராமமும் போதும். ஆதலால் துணி உற்பத்தி கொள்கையை ஒவ்வொரு மாகாணமும் தனித்தனியாக வகுத்துக் கொள்ள முடியாது என்றுநீங்கள் கூறுவதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. என்னுடைய குறிப்பிலுள்ள முதல் பாராவில் கண்ட அடிப்படைத் தத்துவத்தை தாங்கள் ஒப்புக்கொள்வதாக கூறுகிறீர்கள். அப்படியானால் துணி விஷபத்தில் வகுக்கும் சுய தேவை திட்டத்தையும் ஒப்புக்கொள்ள வேண்டுமல்லவா? அதுதான் துணிப் பஞ்சத்தை சீக்கிரமாகவும் நிச்சயமாகவும் போக்குவதற்குள்ள வழியாகும்.

வறுமையும் வேலையில்லாமையும் ஒரிஸ்ஸா மாகாணத்தில் அதிகமாயிருப்பதால் இந்தத் திட்டத்தை மற்ற மாகாணங்களைவிட ஒரிஸ்ஸா மாகாணத்திலேயே மிக நன்றாக நடத்த முடியும். பொருளாதார திட்டம் எதுவாயினும் அதன் நோக்கங்கள் மூன்றாகும். அது நமக்கு வேண்டிய பொருள்களைக் கொடுப்பது ஒன்று. உபயோகமான தொழிலை தருவது இரண்டு. அதே சமயத்தில் ஆன்ம வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களை அளிப்பது மூன்று. இந்த மூன்று நன்மைகளில் மிக குறைந்த நன்மை நமக்கு வேண்டிய பொருள்களை தருவது என்பதாகும். அந்த நன்மையை மட்டுமே மில்தொழில் தரமுடியும். ஜனங்கள் மில் துணியை வாங்கும்பொழுது தாங்கள் உற்பத்தி செய்த வேறு பொருள்களைக் கொடுத்து விட்டே அதை வாங்குகிறார்கள். அதனால் அந்தப் பொருள்கள் அவர்களுக்கு குறைந்து விடுகின்றன. ஆனால் அவர்கள் தங்களுக்கு வேண்டிய துணியை தாங்களே உற்பத்தி செய்து கொண்டால் தாங்கள் உற்பத்தி செய்யும் வேறு பொருள்களை இழக்க வேண்டிய அவசியமில்லை. இந்தக் காரணத்தினால் தான் மில் தொழில் ஒரிஸ்ஸாவிலுள்ள ஜனங்களை சுரண்டுவதைத் தவிர வேறு எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாதென்று கூறுகிறேன்.''

இந்தக் கடிதப் போக்குவரத்தி லிருந்து காங்கிரஸ் மகாசபை இது விஷயத்தில் ஒன்றோடொன்று தொடர்பு உடையதான கொள்கை ஒன்றை வகுக்க வேண்டியது அவசிய மென்பது புலனாகின்றது. இந்தக் காரியத்தைச் செய்வதற்காகத்தான் அலாகாபாத் மகாநாடு சில யோசனைகளை கூறியிருக்கிறது.

ஜே. ஸி. குமரப்பா.

## வாளைக் கொழுமுனையாக மாற்றுக

காங்கிரஸ் மகா சபை பல ஆண்டுகளாக ஒரு போர் ஸ்தாபனமாக இருந்து வருகிறது. எல்லாத் துறைகளிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரத்தை அசைத்து கீழே தள்ளி ஜனங்களுக்கு உதவி செய்யக்கூடிய ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பதே அதன் தனி நோக்கமாகும்.

வயல்களை உழவோ உபயோகத்துக்கு வேண்டிய பொருள்களை உற்பத்தி செய்யவோ பட்டாளத்துக்கு நேரம் கிடையாது. ஆனால் சேனை போர் செய்து முடித்துவிட்டால் அதன் பின் அது சமாதான காலத்துக்கு வேண்டிய காரியங்களை செய்ய வேண்டியதாகும். அப்படி இல்லையானால் அதுவரை போர் செய்து தேசத்தை பாதுகாத்த போர்வீரர்கள் கொள்ளைக் கூட்டத்தாராக மாறிவிடுவார்கள். எந்தச் சமயத்தில் இப்படி ஆவார்கள் என்பதைச்சொல்வது கஷ்டமான காரியம். யுத்த காலத்து தலைவர்கள் அதிகார வெறிகொண்டு நன்றியறிதலுள்ள ஜனங்களின் நல்லெண்ணத்தை உதவியாகக்கொண்டு ஆட்சி புரிவார்கள். காலக்கிரமத்தில் தேச பக்தர்கள் எல்லோரும் சுயநலம் தேடும் புல்லுருவிகளாக ஆகிவிடுவார்கள். இப்பொழுது தேசீய தலைவர்களைக் கொண்ட இடைக்கால சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது. அதனால் ராஷ்டிரபதி காங்கிரசாகிய போர் ஸ்தாபனத்தை சமாதான காலத்திற்கு ஏற்றதாக மாற்றியமைக்க முயற்சி செய்து கொண்டிருப்பதைக் காண சந்தோஷமாயிருக்கிறது. அதற்காக அவரைப் பாராட்ட வேண்டும். அவர் எண்ணுகிறபடி செய்ய வேண்டுமானால் தலைவர்களுடைய வாழ்வு முறையும் ஊழியர்களுடைய வாழ்வு முறையும் மாற்றியமைக்கப்பட வேண்டும். இது வரை காங்கிரஸ் மாகா சபை சமாதான காலத்தில் செய்ய வேண்டிய காரியங்களை எல்லாம் போர்க் காரியங்களில் ஈடுபடாமல் தத்தம் கடமைகளைச் செய்து வந்த விசேஷ ஸ்தாபனங்களிடத்தில் விட்டிருந்தது. ஆனால் இப்பொழுது ராஷ்டிரபதி மகாணத் தலைவர்கள் மகாநாடு ஒன்று நடத்தி காங்கிரஸ் ஸ்தாபனம் முழுவதும் நிர்மாண வேலை ஸ்தாபனமாக எப்படி மாறலாம் என்பதைப் பற்றி ஆலோசனை செய்தார். காங்கிரஸ் மகா சபையார் ஏழைகளுக்கு உண்ண உணவும் உடுக்க உடையும் வசிக்க இடமும் கொடுக்கும் வேலையை மேற்கொள்வார்களானால் அவர்கள் ஜனங்களுக்கு அரசியல் விடுதலை பெற்று கொடுத்தது போலவே பொருளாதார சுயராஜ்யத்தையும் ஏற்படுத்தியவர்களாவார்கள்.

அநேக மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் வேலை செய்து வருகின்றன. ஜனங்களுக்கு சேவை செய்ய எதைச் செய்யலாம் என்பதைப்பற்றி தெரிந்துகொள்ளாமல் திண்டாடுகின்றன. அந்த மந்திரி சபைகளில் உள்ளவர்கள் பெரும்பாலோர் தங்கள் வாழ்நாள் முழுவதையும் போர்க்களத்திலேயே கழித்தவர்கள். இவ்வளவு காலம் வாளை உபயோகித்து வந்ததால் இப்பொழுது அவர்களுக்கு ஏர் பிடித்து உழுவது கஷ்டமாயிருக்கிறது. ஆதலால் அஸ்திவாரத்துக்கு வெடி வைத்தவர்களுடைய கவனத்தை கட்டடம் எழுப்பும் காரியத்தில ஈடுபடச் செய்வதற்காக இந்த மகா நாட்டை ராஷ்டிரபதி கூட்டி வைத்தது காலத்தில் செய்த வரவேற்க வேண்டிய காரியமாகும்.

மாகாண காங்கிரஸ் தலைவர்கள் அலகாபாத்தில் கூடி காங்கிரஸின் எதிர் கால திட்டத்தை குறித்து நிர்மாண ஊழியர்களுடன் கலந்து பேசினார்கள். அப்பொழுது அவர்களிடையே காணப்பட்ட உற்சாகமும், எல்லாத் துறைகளிலும் ஜனங்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற அவர்களுடைய ஆவலும் நாட்டின் க்ஷேமத்திற்கு நற்குறிகளாக காணப்படுகின்றன. அவர்கள் ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள். அது கூடிய சீக்கிரம் காரியக் கமிட்டி முன்னர் சமர்ப்பிக்கப்படும். அவர்கள் அதை ஒத்துக் கொண்ட பின்னர் உறுதியுடனும் உற்சாகத்துடனும் அது நிறை வேற்றப்படு மென்று நம்புகிறோம்.

அந்த மகா நாடு நிறை வேற்றிய தீர்மானங்களை சென்ற இதழில் தந்தோம்.

அவர்கள் மூன்று நாட்களில் எத்தனை காரியங்களை சாதித்திருக்கிறார்கள் என்பது அதிலிருந்து தெரிய வரும். காலம் வரும்பொழுது மந்திரி சபைகளின் உத்தியோகஸ்தர்கள் இந்த புனருத்தாரணத் திட்டத்துக்கு பரிபூரணமான ஒத்துழைப்பை நல்குவார்கள் என்று நம்புகிறோம்.

ஜே. ஸி. குமரப்பா

## குற்றத்தை ஒப்புக்கொள்க

மகாத்மா காந்தியடிகள் மார்ச் மாதம் 7-ம் தேதி நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் ராம்துன் பாடிய பொழுது ஜனங்கள் தாளம் போடுவதைக் கண்டு அவரே தாளம் போடும் வித்தையை சிறிது நேரம் கற்றுக்கொடுத்தார். அதன் பின் அவர் பேசியதாவது:—

“இன்று நான் இங்கே வருமுன் சிறிது நேரம் ஓய்வு கொண்டிருந்தேன். பகல் முழுவதும் ஹிந்து நண்பர்களும் முஸ்லிம் நண்பர்களும் கூறிய விஷயங்களை கேட்டுக்கொண்டிருந்தேன். நிலைமை முற்றிலும் சரிப்பட்டுவிட்டதாக உறுதி கூற அவர்கள் யாராலும் முடியவில்லை. இது எனக்கு மனச் சோர்வை உண்டாக்கிற்று. அதனாலேயே எனக்கு ஓய்வு அவசியமாயிருந்தது.

‘ஸ்திதபிரக்ஞன்’ என்று கீதையின் இரண்டாவது அத்தியாயத்தில் கூறப்படும் நிலையான அறிவுடையவன் என்னும் லட்சியத்தை அடைய நான் இடைவிடாமல் முயன்றுகொண்டிருக்கிறேன். என்னைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைத்துக்கொண்டாலும் நான் இன்னும் அந்த லட்சியத்துக்கு வெகு தூரத்திலேயே இருந்து கொண்டிருக்கிறேன் என்பதை அறிவேன். அந்த லட்சியத்தை அடைந்து விட்டால் பக்கத்திலுள்ளவர்களை எல்லாம் அடியோடு மாற்றிவிடக்கூடிய ஆற்றல் அந்த லட்சியத்தை அடைபவருடைய எண்ணத்துக்கு கூட உண்டாகி விடும். ஆனால் எனக்கு அந்த ஆற்றல் உண்டாகி விட்டதா? இல்லை. நான் எல்லோரையும்போல் சாதாரண மனிதனே யாவேன். ஆயினும் கீதை கூறுகின்ற அந்த உயர்ந்த லட்சியத்தை அடைவதற்காக சதா காலமும் முயன்றுகொண்டிருக்கிறேன் என்று மட்டும் கூறிக்கொள்வேன். என்னுடைய எண்ணங்களுக்கு எந்த சகோதர சகோதரிகள் செவிசாய்ப்பார்களோ அவர்களுக்கு கலகம் செய்கிறவர்களிடத்தில் நேரடியான செல்வாக்கு கிடையாது. அதனாலேயே நான் நவகாளியில் செய்ததுபோல் இங்கும் கிராமம் கிராமமாக சென்று வரலாமா என்று சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். கிராமம் கிராமமாக சென்று சகோதர முஸ்லிம்களுக்கு தவறு செய்துவிட்ட ஹிந்துகிராமவாசிகளுக்கு நேரில் போய் என்னுடைய கருத்துக்களைச் சொல்லி திருத்தலாமா என்று யோசிக்கிறேன்.

பீஹார் துளசிதாசர் புண்ணியபூமி. பீஹாரிலுள்ளவர்கள் எவ்வளவு கல்வியறிவில்லாமலோ தரித்திரமாகவோ இருந்தாலும் அவர்கள் எப்பொழுதும் துளசிதாசின் பெரிய ராமாயண இதிகாசத்தை பாடிக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு பாப புண்ணியமென்றால் என்ன என்பது தெரியும். அப்படிப்பட்டவர்கள் இப்பொழுது பெரிய குற்றங்களை செய்திருக்கிறார்கள். ஆதலால் அவர்களுடைய பிராயச்சித்தம் அந்த அளவுக்கு பெரியதாக இருக்க வேண்டுமல்லவா? "எவ்வளவுக்கெவ்வளவு பாபம் செய்கிறவர் பெரியவரோ அவ்வளவுக்கவ்வளவு அவருடைய பாபமும் பெரியதாகும்" என்று ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழமொழியை ஞாபகத்தில் வைத்துக்கொண்டே நீங்கள் உங்களால் கஷ்டமடைந்தவர்களுக்கு நஷ்டஈடு செய்ய முயல வேண்டும்.

ஹிந்துக்களுடைய வீடுகளில் பூட்டிவைக்கப்பட்டுக் கிடக்கும் முஸ்லிம் பெண்களை உடனே அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பிவிட வேண்டுமென்று நேற்று மாலையில் சொன்னேன். குற்றம் செய்தவர்கள் தைரியமாக முன் வந்து செய்த பாபச் செயல்களை பகிரங்கமாக ஒப்புக்கொண்டு தங்களுக்கு நியாயமாக அளிக்கப்படும் தண்டனையை ஏற்றுக் கொள்ள தயாராக இருந்தால் அது உண்மையிலேயே ஒரு பெரிய வீரச்செயலாகும். அத்தகைய மனோதைரியம் இல்லாதிருந்தால் அவர்கள் பெண்களை என்னிடத்தில் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். அவர்கள் செய்ய வேண்டிய மற்றொரு காரியம் ஒன்று உண்டு. சுமார் ஒருகோடிரூபாய் பெறுமான சொத்துக்கள் கொள்ளையடிக்கப் பட்டோ அழிக்கப்பட்டோ போய்விட்டதாக சொல்கிறார்கள். நிச்சயமான தொகை எதுவாயிருந்தாலும் சரி. இரண்டு ரூபாய் உள்ளவனிடமிருந்து இரண்டு ரூபாயையும் பிடுங்கி விட்டால் அவன் எல்லாவற்றையும் இழந்தவனே யாவான். ஆதலால் கொள்ளையடிக்கப்பட்ட பொருளை திருப்பிக் கொடுத்து விடவேண்டும். நஷ்டம் ஏற்பட்ட இடங்களில் எல்லாம் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். இது ஹிந்துக்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும். பொருளை இழந்தவர்கள் இப்பொழுது உயிருடன் இல்லா விட்டால் திரும்பக் கொடுக்கப்படும் பொருளையோ, நஷ்ட ஈட்டையோ அவர்களுடையபந்துக்களுக்கு கிடைக்கும்படிசெய்ய வேண்டும். ராமாயணம் நடந்த ப்ரதேசத்தில் வசிப்பவர்களும் அந்த உன்னத இலக்கியத்தில் கண்ட போதனைப்படி நடப்பதற்கு முயன்று வருபவர்களுமான பீஹார் மக்கள் இவ்வளவாவது செய்வார்களென்று எதிர்பார்க்கிறேன்."

## ஹிந்துக்களுக்கு புத்திமதி

மகாத்மா காந்தியடிகள் பாட்னாவில் 8-ம் தேதி மாலை நடந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கூறியதாவது :—

"நான் பீஹாருக்கு எந்தக் காரியமாக வந்தேனோ அந்தக் காரியத்தைப்பற்றிதான் நான் தினந்தோறும் பேசிக்கொண்டிருக்கிறேன். அதற்காக நீங்கள் என்னை மன்னித்துவிடுவீர்களென்று நம்புகிறேன். கலக காலத்தில் கஷ்டப்பட்ட முஸ்லிம்கள் தினந்தோறும் என்னிடம் கூறிவரும் துன்பக்கதைகளை காதால் கேட்பது என்னுடைய கடமையாகிவிட்டது. அவர்களில் ஒருவர் வந்து இரண்டு நாட்களுக்கு முன்னால்கூட முஸ்லிம் வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டதாக என்னிடம் முறையிட்டுக் கொண்டார். அது உண்மையானால் மிகவும் வருந்தத்தக்க காரியமாகும். அந்தமாதிரி பல இடங்களிலும் நடக்குமானால் இன்னும் பச்சாதாப உணர்ச்சி ஏற்படவில்லை. என்று அர்த்தமாகும் - ஆனால் பச்சாதாப உணர்ச்சி ஏற்படாமல் பீஹாரில் மட்டுமின்றி இந்தியா முழுவதிலும்கூட இரண்டு சமூகத்தாருக்கிடையில் ஒற்றுமை ஏற்படமாட்டாது.

ஆதலால் ஹிந்துக்கள் தாங்கள் செய்த காரியங்களைக் கடமை என்று எண்ணியே செய்திருக்கிறபடியால் அவர்களை நாம் தண்டிக்கக் கூடாதென்று எச்சரித்து எனக்கு ஒரு தந்தி அனுப்பப்பட்டிருப்பதைக் காண ஆச்சரியமாக இருக்கிறது. அந்த தந்தியை அனுப்பியவர் இத்தகைய எச்சரிக்கையை விடுப்பதால் இந்தியாவுக்கோ ஹிந்து மதத்துக்கோ எவ்வித நன்மையும் செய்தவர் ஆக மாட்டார் என்று எவ்வித தயக்கமுமின்றி கூறுவேன். நான் ஒரு ஹிந்து, எனக்கு என்னுடைய ஹிந்து மதத்தில் அசையாத நம்பிக்கை உண்டு. நான் ஹிந்துவாயிருப்பது போலவே முஸ்லிமாகவும் கிருஸ்தவனாகவும் பார்ஸியாகவும் இருப்பதாக கூறினால் அந்த அளவுக்கு நான் சிறந்த ஹிந்து ஆவேன். இந்தமாதிரியே நீங்கள் ஒவ்வொருவரும் ஆக வேண்டுமென்று விரும்புகிறேன். என்னுடன் சேர்ந்த ஹிந்துக்களோ மற்ற மனிதர்களோ தவறு செய்தால் அதைச் சரி என்று நான் கூறுவேனானால் நான் ஹிந்து என்று கொண்டாடும் பாத்தியதையை இழந்துவிடுவேன். நீங்கள் செய்தது தவறு என்று அறியும்படியாக உங்கள் கண்ணை திறப்பதுமூலம் உங்களுக்குச் சேவை செய்ய விரும்புகிறேன். வேறு இடங்களில், உதாரணமாக, பஞ்சாபில் அக்ரமங்கள் நடப்பதைக் கண்டு நாமும் செய்ய வேண்டுமென்று நீங்கள் எண்ணிவிடலாகாது. நீங்கள் சுதந்திரப்பிரஜைகளாக ஆக வேண்டுமென்று விரும்பினால் இந்தியாவில் வேறு எங்கேனும் அக்ரமங்கள் நடப்பதைக் கேட்டவுடன் நீங்களும் அக்ரமம் செய்ய ஆரம்பித்துவிடக் கூடாது. எங்கெங்கே நல்லவை காணப்படுகின்றனவோ அவைகளை கிரகித்துக் கொள்வதே உங்களுடைய கடமையும் என் கடமையுமாகும்.

நான் நான்கு நாட்களாக உங்களிடையில் தங்கியிருக்கிறேன். நீங்கள் உங்களுக்கும் கஷ்டப்பட்டு நிற்கும் முஸ்லிம்களுக்கும் செய்ய வேண்டிய கடமையைப் பற்றி உங்களுக்கு ஞாபகப்படுத்த நான் முயன்றுகொண்டிருக்கிறேன். அந்தக் கடமை யாதெனில் கஷ்டப்படுவர்களுடைய சகாயத்துக்காக நீங்கள் எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்க வேண்டுமென்பதாகும். ஆதலால் நீங்கள் பச்சாதாபப்படுவதற்கு அறிகுறியாக உங்களால் இயன்றதை கொடுக்கும்படியாக கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு தெளிவாக இந்த விஷயத்தைக் கூட உங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கிறதே என்று வருத்தமாயிருக்கிறது. நான் கேளாமலே அநேக ஹிந்துக்கள் நவகாளியில் கஷ்டப்படுகிறவர்களுக்கு பணம் அனுப்பி வைத்தார்கள். அந்தப் பணம் மொத்தம் 3 லட்ச ரூபாய் இருக்குமென்று எண்ணுகிறேன். இப்பொழுது ஞாபகப்படுத்திவிட்டேன். இனி ஏராளமாக தருவீர்களென்று நம்புகிறேன். கொடுக்கும் பணம் ஒவ்வொரு பைசாவுக்கும் கணக்கு கொடுக்கப்படும். பொதுஜன சர்க்கார் ஏற்பட்டிருப்பதால் அவர்கள் பண விஷயத்தை கவனித்துக் கொள்வார்களென்று எண்ணி நீங்கள் உங்களை ஏமாற்றிக்கொள்ளக் கூடாது. எவ்வளவுக்கெவ்வளவு சர்க்கார் ஜன நாயகமுடையதாக இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு பொதுப்பணத்தை உபயோகிப்பதில் அவர்களுக்கு கஷ்டமுண்டு. ஆதலால் ஒழுங்கான முறையில் நடைபெறும் சமூகத்தில் அந்தக் கஷ்டங்களை அறிவுடன் கொடுக்கும் நன்கொடைகளை வைத்தே தீர்த்துக் கொள்ள வேண்டும்.

கண் குருடு என்று இரங்குவது போலவே அறிவு சூனியம் என்றும் இரங்க வேண்டும் — செஸ்டர்பீல்டு

பஞ்சாபில் அக்ரமங்கள் செய்கிறவர்கள் தங்கள் மதத்திற்கோ தங்கள் தேசத்திற்கோ நன்மை செய்தவர்களாக மாட்டார்கள். தங்கள் தவறான செயல்களால் சுதந்திரம் வருவதை தடுக்கவே உதவுகிறார்கள். பஞ்சாபில் இந்த அக்ரமங்களின் காரணமாக கவர்னர் ஆட்சி ஏற்பட்டிருப்பதுதான் மிச்சம்.''

### ஊழியர்களின் கடமை

மகாத்மா காந்தியடிகள் பாட்னாவில் 9-ம் தேதி மாலை செய்த பிரசங்கமாவது :—

''வாரத்தில் ஒரு நாளாவது மௌனமாயிருப்பது எனக்கு நன்மை தருவதாயிருக்கின்றது. ஒவ்வொருவரும் நாள் முழுவதும் மௌனமாக இருந்து தம்மை ஆராய முடியுமானால் எவ்வளவு நன்மையுண்டாகும்! அத்தகைய ஆன்ம பயிற்சியை செய்ய ஜனங்கள் பழகிவிட்டார்களானால் பீஹாரில் ஏற்பட்ட துர்க்கிருத்தியங்களால் தங்கள் கைகளை கறைப்படுத்திக் கொண்டதுபோல கறைப்படுத்திக்கொள்ள மாட்டார்கள். ஆனால் மௌன விரத அனுஷ்டானத்தால் உண்டாகக்கூடிய நன்மைகளைக் குறித்து விஸ்தாரமாக பேசுவதற்கு இது சந்தர்ப்பமன்று.

இந்த மாகாணத்தில் நடந்த வெட்ககரமான கொலை பாதகங்களில் நேரில் கலந்துகொள்ளாதவர்களுடைய கடமை யாது என்பதைச் சுருக்கமாக குறிப்பிடுவதே என் நோக்கம். அவர்களுடைய முதற்கடமை எண்ணங்களை தூய்மைப்படுத்திக்கொள்வதே யாகும். எண்ணங்கள் தூய்மையாக இல்லாவிட்டால் செயல்கள் ஒருநாளும் தூய்மையாக இருக்க முடியாது. பிறரைப்பார்த்து யாரும் தூய்மையான காரியத்தை செய்ய முடியாது. பிறரைப் பார்த்து நல்லவராக ஆவதற்கு முயன்றால் அத்தகைய செயல் உண்மையான செயலாக இல்லாததால் பிறரிடம் செல்வாக்கு பெறும் விஷயத்தில் ஒரு நாளும் வெற்றி பெறாது. ஆனால் செயல்களைப்போலவே ஹிருதயமும் தூய்மையாக ஆகிவிட்டால் அப்படிப்பட்டவருடைய எண்ணங்கள் பிறரைத் திருத்துவதற்கு வேண்டிய ஆற்றலைப் பெற்று விடும். எண்ணங்களும் செயல்களும் ஒருங்கே தூய்மை ஆகிவிட்டால் பீஹாரின் நற்பெயரை பாழாக்கி நிற்கும் தவறான காரியங்கள் மறுபடியும் நடைபெறமாட்டா. ஆனால் உலகமானது ஒரே மாதிரியாக முன்னேற்றமடைவதில்லை. எண்ணங்களும் செயல்களும் ஒன்றுபோல் தூய்மையடைவதில்லை. எந்தச் சமயத்திலும் இவ்விரண்டும் ஏககாலத்தில் முற்றிலும் தூய்மையாக ஆவதில்லை.

ஆதலால் ஊழியர்கள் செய்யவேண்டிய கடமை யாதுஎன்பதுபற்றி மட்டும் இன்று குறிப்பிட விரும்புகின்றேன். அக்ரமம் செய்தவர்களிடம் அவர்களுடைய அக்ரமங்களால் ஏற்பட்டிருக்கும் தீமைகளை விளக்கி சொல்வது அவர்களுடைய முதற் கடமை. அத்தகைய அக்ரமங்களைச் செய்வதால் அவர்களுக்கும் நன்மையில்லை, அவர்களுடைய மதத்துக்கும் தேசத்துக்கும் நன்மை இல்லை என்பதை விளக்கிக் காட்ட வேண்டும். யாரை கெடுக்க வேண்டுமென்று எண்ணினார்களோ அவர்களைக் கெடுக்கவும் அவர்களால் முடியவில்லை என்பதையும் விளக்க வேண்டும். அக்கிரமிகளை பகிரங்கமாக குற்றங்களை ஒப்புக்கொள்ளுமாறு தூண்ட வேண்டும். அக்கிரமிகள் கொள்ளையடித்த சொத்துக்களை திருப்பிக் கொடுக்கவும் கூட்டி வந்த பெண்களை திரும்ப அனுப்பிவிடவும் செய்யும்படியாக செய்யவேண்டும். மனமாறுதல் ஒருநாளும் சட்டத்தின் உதவியைக் கொண்டு ஏற்படுத்த முடியாது. கலககாலத்தில் கஷ்டப்பட நேர்ந்த முஸ்லிம் சகோதர சகோதரிகளுக்கு சகாயம் செய்ய வேண்டுமென்று நான் உங்களை நேற்றுக் கேட்டுக் கொண்டேன். ஆனால் நீங்கள் நேற்று கூட்டத்திற்கு வரும்பொழுது பணம் கொண்டு வரவில்லை. ஆதலால் இந்த நல்ல காரியத்துக்கு இன்று உங்களால் இயன்றதெல்லாம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.''

### ஹிந்துஸ்தானி பிரசார சபையின் தீர்மானம்

வார்தாவிலுள்ள ஹிந்துஸ்கானி பிரசார சபையின் காரியக் கமிட்டியார் கீழ்க்கண்ட தீர்மானத்தை செய்திருக்கிறார்கள் :—

தேசீய பாஷையாகிய ஹிந்துஸ்தானியை பரப்புவதில் அதிகமான கவனத்தை ஈடுபடுத்த வேண்டுமென்று ஹிந்துஸ்தானி பிரசார சபையின் காரியக் கமிட்டியார் சர்க்கார் எல்லோரையும் வேண்டிக் கொள்கிறார்கள். பல மாகாணங்களிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்கு ஹிந்துஸ்தானியி உபயோகம் மிகவும் அவசியம் என்பது விளக்காமலே தெரியக் கூடிய விஷயமாகும். சுதந்திர இந்தியாவில் ரயில்வே தபால், தந்தி, பாங்க் முதலியவற்றின் காரியங்கள் அநேகமாக ஹிந்துஸ்தானியிலேயே நடைபெற வேண்டியிருக்கும். ஆதலால் எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக ஹிந்துஸ்தானியை நாகரி லிபியிலும் உருது லிபிலும் கற்கும்படியாக ஏற்பாடு செய்யும்படி இந்தக் கமிட்டியார் மாகாண சர்க்கார்களை கேட்டுக் கொள்கிறார்கள். தற்சமயம் கீழ்க் கண்ட கொள்கையை அனுசரிக்க வேண்டும்.

(1) சகல பள்ளிகூடங்களிலும் இரண்டு லிபிகளையும் தெரிந்த ஹிந்துஸ்தானி ஆசிரியர்களை கட்டாயமாக நியமிக்கும்படி செய்யவேண்டும்.

(2) இரண்டு லிபிகளையும் கற்ற மாணவர்களுக்கே சர்க்கார் சர்ட்டிபிகேட் வழங்க வேண்டும். இரண்டு லிபிகளையும் ஏககாலத்தில் கற்க வேண்டுமா? என்னும் விஷயத்தை அந்தந்த மாகாணமே தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.

(3) இரண்டு லிபிகளையும் கற்ற மாணவர்க்கே உதவிச் சம்பளமும் பரிசும் வழங்க வேண்டும். போதனா கலாசாலைகளிலுள்ள மாணவர்களும் சர்க்கார் ஊழியர்களும் இரண்டு லிபிகளிலும் இந்துஸ்தானியை கட்டாயமாக தெரிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும்.

### பெண்களுக்கு ஒரு யோசனை

காந்தியடிகள் ஹெய்ம்சாரில் தங்கியிருந்த பொழுது பிப்ரவரி மாதம் 28-ம் தேதி பிரார்த்தனைக் கூட்டத்தில் கீழ்க் கண்ட கேள்வி கேட்கப்பட்டது :—

கேள்வி :—நீங்கள் எங்களிடையே காணப்படும் பல சமூக ஊழல்களைப் பற்றி கூறி யிருக்கிறீர்கள். அவைகளெல்லாம் உண்மையானவையே. ஆனால் ஆண் மக்கள் அவசியமான சமூக சீர்திருத்தங்களை செய்ய பிரியப் படாவிட்டால் பெண்களாகிய நாங்கள் என்ன செய்ய முடியும் ?

பதில் :—பெண்கள் எந்த சந்தர்ப்பத்திலும் ஆண்களை விட தாழ்ந்தவர்களாகவோ அவர்களுக்கு கீழ்ப்பட்டவர்களாகவோ கருதிக் கொள்ளலாகாது. பெண் ஆணில் பாதி என்று கூறுகிறார்கள். அப்படியானால் ஆண் பெண்ணில் பாதி என்று கூறலாம். ஆணும் பெண்ணும் தனித்தனி உள்ளவர்கள் அல்லர். ஒன்றில் பாதி ஆவார்கள். ஆங்கில பாஷை இதைவிடச் சிறப்பாகவும் கூறுகிறது. பெண்ணை அது ஆணில் சிறந்த பாகமெனவே கூறுகிறது. ஆதலால் ஆண்கள் அவசியமில்லாத அகௌரவமான தடைகளை ஏற்படுத்தினால் அவைகளை எல்லாம் எதிர்த்து கலகம் செய்ய வேண்டியது பெண்களின் கடமையாகும். எந்தத் தடையானாலும் நன்மை செய்ய வேண்டுமானால் பிறர் நிர்ப்பந்தத்தின் பேரில் ஏற்றுக் கொள்ளப் படுவதாக இல்லாமல் தாமாக மனமுவந்து ஏற்றுக்கொள்வதாக இருக்கவேண்டும்.

சாத்வீக முறையில் கலகம் செய்தால் அதனால் தீங்கு ஏற்படமாட்டாது. ஆனால் அத்தகைய கலகம் செய்வதற்கு மனத்தூய்மையும் பகுத்தறிவும் வேண்டும்.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரன் தெரு, ஜி. டி. சென்னை.
பிரசுரித்தவர்: சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர் : பொ. திருகூட சுந்தரம் ; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.